உ

## ஸ்ரீ சந்த்ரமௌளீச்வராய நம:

## வேத தர்மசாஸ்த்ர பரிபாலன ஸபை, கும்பகோணம், ப்ரசுரம் 46.

# நமது கடமை

தொன்றுதொட்டு வர்ணாச்ரமத்திற்கும், கல்விக்கும் களஞ்சியமெனப் புகழ்வாய்ந்த இந்தப் பாரதநாடு தற்காலம் க்ஷேமம் குறைந்து, க்ஷாமம் நிறைந்து, வறுமைக்குக்காளாகி யிருப்பதை யாராலும் மறுக்க முடியாது. அதற்கு முக்கியமான காரணம் நமது புராதன நாகரீகமெனும் தோட்டத்தில் நவீன நாகரீகமாகிய கொடியை நாம் படரும்படி விட்டதுதான். இந்நவீன நாகரீகக்கொடி நம்முடைய தோட்டமாகிற ஜன ஸமூகத்தில் தீவ்ரமாக படர்ந்து, நமது மதத்திற்கு அஸ்திவாரமான வர்ணாச்ரம வ்ருக்ஷத்தைப் படர்ந்து, மூடி, நாசம் செய்து வருவதை அறியாதவர் இல்லை.

அப்படி அறிந்திருந்தபோதிலும் அச்ரத்தையாலும் ஆலஸ்யத்தினாலும் எல்லாம் கலியின் கொடுமை என்று எண்ணிக் கொண்டு ஒன்றும் செய்யாமல் அலக்ஷ்யமாக இருந்துவருகிறோம். இவ்வளவு ஆபத்தான ஸந்தர்பம் நேர்ந்திருக்கும்போது ஸனாதன தர்ம வ்ருக்ஷத்தில் படரும் நவனாக ரீக மென்னும் கொடியை எடுத்தெறிந்து வ்ருக்ஷத்தைக் காப்பாற்ற நாம் முயற்சிப்பதில்லை. இவ்விருக்ஷம் போய்விட்டால் நம்மால் புதிதாக உண்டுபண்ண முடியுமா. லக்ஷக்கணக்கான வருஷக்கணக்கில் நம்முடைய க்ஷேமத்திற்காக எவ்வளவோ கஷ்டப்பட்டு நாம் சுலபமாக அறியக்கூடிய வழியில் நமது முன்னோர்களான மஹர்ஷிகள் நமக்குக் கொடுத்த அறிய பொக்கிஷமான வேத சாஸ்த்ரங்களை நாம் அழிய விட்டோமானால் நம்மைவிட அறிவீனர்களும் அத்ருஷ்டஹீனர்களும் வேறு யாரும் இருக்கமாட்டார்கள் என்பது திண்ணம்.

"அரிது அரிது மானிடராதலரிது" என்றபடி கிடைப்பதற்கு அரிதான மனிதஜன்மம் எடுத்தும், அதிலும் புத்தியிலும் சக்தியிலும் உயர்ந்த ஸ்தானத்தை அடைந்திருந்தும், நாம் நமது ஸ்தானத்திலுருந்து நழுவலாமா. அப்படி நழுவாமலிருக்க வழிதேடுவதைக்காட்டிலும் நமக்கு வேறு கார்யம் ஒன்றுமில்லை. நாம் நமது கடமைகளை ஸரிவர நடத்தினால் அதன் பலனாக திருடர்கள் அபகரிக்க முடியாத பெட்டியில் வைத்திருக்கும் பெரும் நிதி போல இது பிற்காலத்திற்கு நமக்கு உதவும். உலகில் ஒரு சிறிய ஸ்தாபனத்தை அடைந்து, அதை சாச்வதமாகச் செய்து கொள்ளவேண்டு மென்பதற்கு நாம் எவ்வளவோ ப்ரயாசை எடுத்துக் கொள்கிறோம். ஆனால் அதன் ப்ரயோஜனம் ஸ்வல்பம், அதுவும் இந்த உடல் உள்ளவரையில்தான். அது உள்ளபடி ஒரு ஸுகத்தோடு சேர்ந்தது அல்ல என்பது அனுபவத்தில் நமக்கு நன்றாய்த் தெரிகிறது. கொஞ்சமும் ப்ரயோஜனமில்லாத விஷயத்தில் எவ்வளவோ ச்ரமப்படும் நாம் அதில் ஒரு லேசமாவது நமது ஆத்ம க்ஷேமத்திற்குப் பாடுபடவேண்டாமா. நாம் சாச்வதமாக ஸுகமடைய ஓர் உபாயம் இருந்தால் அதை ஏன் நாம் உபயோகிக்ககூடாது. அவ்வித உபாயங்கள் அநேகம் இருந்த போதிலும் அவற்றுள் சிறந்தது

வேதஸ்ம்ருதிகளின் விஷயங்களை அறிந்து, அவைகளில் சொல்லியிருக்கிறபடி நடப்பதுதான். இதைக்கடைப்பிடித்துத்தான் நமது முன்னோர்கள் வேத சாஸ்த்ரங்களை முறைபடி பயின்று, அவைகளில் சொல்லியிருக்கிறபடி தங்கள் கடைமைகளைச் செய்து, அதனின்றும் நல்ல பேராநந்தம் அடைந்திருக்கிறார்கள் என்பது சொல்லாமலே விளங்கும். இக்காலத்தில் நாம் கொஞ்சங்கூட இவ்விஷயங்களில் ச்ரத்தையெடுத்துக் கொள்ளாமலிருப்பதற்குக் கலிமஹாராஜனின் கொடிய செயலைத்தவிர வேறு காரணம் ஒன்றும் தோன்றவில்லை.

இஹம் பரம் இரண்டிலும் நமக்கு நலம் கொடுக்கும் வேதங்கள் நமது அச்ரத்தையினால் நாளடைவில் மலினமடைந்து வருகின்றன. இக்காலத்தில் வேதம் பயின்றவரை தேடுவோமானால் ஒவ்வொரு க்ராமத்திலும் ஒருவர் கிடைப்பதே அரிதாயிருக்கிறது. வேதம் ஓதாதவன் வேதியனாகமாட்டான் என்பது சாஸ்த்ரக் கொள்கை. அப்படிப்பட்ட வேதத்தை ஸாங்கோபாங்கமாக அத்யயனம் செய்யாவிட்டாலும் ஏதோ கொஞ்சம் அறிந்தவர்கள் கூட துர்லபறாகிவிட்டனர். முன் காலத்தில் நமது குழந்தைகளை பள்ளிக்கூடத்தில் வைக்கும் போதாவது ஸமஸ்க்ருத அரிச்சுவடியை படிக்கச் சொல்வதுண்டு. இப்போழுதோ நமது குழந்தைகளுக்கு அ, ஆ என்பது தான் ஆரம்பிக்கப்படுகிறது.

க்ருஹஸ்தர்கள் தங்கள் புதல்வர்களுக்கு தினம் கொஞ்ச நேரமாவது ஸமஸ்க்ருதம் படிக்கவும், அவர்கள் நித்யகர்மானுஷ்டானத்திற்கு வேண்டிய வேதம் கற்றுக்கொள்ளும்படியும் முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டும். அவரவர்கள் தங்கள் நித்யகர்மாக்களை பிறர் உதவியில்லாமல் செய்யக் கற்றுக் கொள்ளவேண்டும். ஒவ்வொரு ப்ராம்ஹணனும் தினந்தோறும் ஸ்நானம், ஸந்யாவந்தனம், ஜபம், ஹோமம், பூஜை, ப்ரம்ஹயக்ஞம், வைச்வதேவம் இவைகளை அவச்யம் செய்யவேண்டும். இவைகளை விடாமல் செய்பவர்களுக்கு எவ்வளவோ பலன்கள் கிடைக்கும் என்று ச்ருதி ஸ்ம்ருதிகள் முறையிடுகின்றன.

ஒவ்வொரு க்ருஹஸ்தனும் தனது புத்ரர்களில் ஒருவரையாவது வேதத்தை நன்றாக கற்றுக்கொள்ளும்படி விடவேண்டும். இது ஒவ்வொரு க்ருஹஸ்தன் கடமையாகும். இதற்கு கக்ஷ்டமோ நக்ஷ்டமோ தேவையில்லை. ச்ரத்தைதான் தேவை. ஸந்த்யாவந்தன வகுப்பு ஒன்று ஒவ்வொரு க்ராமத்திலும் நடத்தலாம். இதனால் நல்ல கார்யங்களுக்கு எல்லோரும் ஒன்று சேருவது, என்ற பழக்கமும் ஏற்படும். தெரிந்தவர்களைக் கொண்டு ஸ்வரத்தோடு சொல்லும்படி செய்து, அவர்களிடமிருந்து எல்லோரும் கற்றுக்கொண்டால் பிழையாகச் செய்வதனால் பலனில்லாமல் போவதும் வராது. சுத்தமாக சொல்லுவதால் உள்ள ச்ரேயஸ் கிடைப்பதோடு காலத்தில் செய்யவேண்டுமென்கிற பழக்கமும் ஏற்படும். இதுவரையில் பழக்க வழக்கமில்லாத வயதான க்ருஹஸ்தர்கள்கூட கொஞ்சம் ச்ரமம் எடுத்துக்கொண்டால் ஆறுமாத காலத்திற்குள்ளாக ப்ரதிதினம் தாங்கள் செய்யவேண்டிய கர்மங்களுக்கு வேண்டிய மந்த்ரங்களை பிழையில்லாமல் கற்றுவிடலாம். அதோடு தான் செய்யும் தேவ, பித்ரு கார்யங்களுக்கும் உபாத்தியாயர் வந்து உதவவேண்டும் என்னும் கவலையில்லாமல் தானே தப்பில்லாமல் செய்துவிடலாம். ஆரம்பத்தில் இவ்வளவு வயதிற்குமேல் ஸந்த்யாவந்தனம் சொல்லிக்கொள்வது முதலில் கொஞ்சம் ஸங்கோஜமாகத் தான் இருக்கும். நாம் லௌகிக ஸௌகர்யத்திற்கான அனேக கார்யங்களை ஸங்கோஜமில்லாமல் செய்துவிடுகிறோம். இஹம் பரம் இரண்டிலும் ச்ரேயஸ்ஸைக் கொடுக்கக்கூடியதும், ஸ்வதர்மமானதுமானதைச் செய்வதில்

ஸங்கோஜப்படுவது மதியீனம். ஸ்வதர்மத்தை விடாமல் பிடிவாதமாக அனுஷ்டிப்பவர்களிடம் வெகு சிறிது காலத்திற்குள் எல்லோரும் மரியாதையாக நடக்க ஆரம்பிப்பார்கள். அதோடு தன்னால் ஒன்றும் செய்யமுடியவில்லையே என்று தங்களைத்தானே அங்கலாய்த்துக் கொள்வார்கள்.

ஆகையால் ஒவ்வொருவரும் ஸ்வதர்மானுஷ்டானம் செய்வதில் அவமானம் ஒன்றும் இல்லையென்று நினைத்து, அவச்யமாக காலம், தேசம், வர்த்தமானம் ஒன்றையும் கவனிக்காமல் தன் ஸ்வதர்மத்தை அனுஷ்டிக்க முயலவேண்டும். ஈச்வரனால் நமக்கு ஏற்படுத்தப்பட்ட தொழில் இதுதான், என்பதைத் தெரிந்துகொண்டு அதை நிறைவேற்ற வேண்டும். தச்சனோ, தட்டானோ மற்றவர்களோ தம் தம் தொழிலைச் சேய்வதில் எப்படி ஸங்கோஜப்படுவதில்லையோ, அதே மாதிரி ப்ராம்ஹணன் தொழிலாகிய வேதமோதுவதை ஸ்ங்கோஜப் படாமல் ச்ரத்தையாக செய்யவேண்டும். நம்மால் செய்யப்படும் தர்மங்களுக்கும் மூலம் வேதமே "வெஹொZவிமொ யஃூஉுூழஃ" (வேதோஅகிலோ தர்மமூலம்) என்று கௌதமர் சொல்லியிருக்கிறார்.

வெஊः கூஷ்ஷ்நொZயிமஜவூः ஸஈஸஸெூா ஜிஜதூநா।
வெஊாஹூாஸொ ஹி விவூஸூ கவஃவஈஜிஹொஉூகெ ॥

(வேத: க்யத்ஸ்னோஅதிகந்தவ்ய: ஸர்பச்யோ த்விஜன்மனா
வேதாப்யாஸோ ஹி விப்ரஸ்ய தப: பரமிஹோச்யதே)

ப்ராம்ஹணர்கள் வேதாத்யயனம் முழுவதும் செய்யவேண்டும். உபநிஷத்துகளையும் அத்யயனம் செய்யவேண்டும். ப்ராம்ஹணனுக்கு அதுவே மேலான தபஸ் என்று கூறப்பட்டிருக்கிறது.

ப்ராஹமணன் எல்லா வேதங்களையும் அத்யயனம் செய்ய வேண்டும். 40, 50 வயதிற்குமேற்பட்ட, ஸம்ஸ்க்ருத அக்ஷரங்கள் கூடத்தெரியாத எங்களால் இனி எப்படி வேதத்தை அத்யயனம் செய்யமுடியும் என்று சிலர் கேட்கலாம். அவர்கள் மேலே சொன்னபடி ஸாதாரணமாக தினந்தோறும் செய்யவேண்டிய ஜபம், ஹோமம், பூஜை, ப்ரம்ஹயட்ஞம், வைச்வதேவம் முதலிய கார்யங்களையாவது ஸரிவர செய்ய முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும்.

நாம் ஒவ்வொருவரும் நமது ஸம்பாத்யத்தில் ஒரு பகுதியையாவது தர்மம் செய்வதில் செலவிடவேண்டும். அப்படிச் செய்யாவிடில் அதைவிட அநேக பங்கு அதிகமாக வ்யாதி மூலம் செலவும் வ்யவஹார மூலம் செலவும் ஏற்பட ஹேதுவாகும். வேதம் கற்றவர்களுக்கு நம்மால் இயன்றவரை மர்யாதையோடு ஒத்தாசை செய்யவேண்டும். அந்த விஷயத்தில் செலவை மிச்சம் பிடிக்க ப்ரயத்னம் செய்யக்கூடாது. நாம் ஒவ்வொருவரும் நாம் முன் ஜன்ம கர்மபலனை அனுஸரித்து ஜன்மம் எடுத்திருப்பதால், இந்த ஜன்மத்தில் நமக்காக ஏற்பட்ட கர்மங்களை ச்ரத்தையோடு செய்து நல்லகதியை அடைய ப்ரயத்னப்படுவது நமது இன்றியமையாத கடமையாகும்.

ஸகலரும் அவரவர்கள் ஸ்வதர்மத்தை அனுஷ்டித்து க்ஷேமத்தை அடையும்படி ஈச்வரன் அனுக்ரஹிப்பாராக.